# 10 பள்ளிகளில் உடனடி வாஷ் (WinS) செயல்கள்.

## பள்ளிகளை மீண்டும் திறக்கத் தயாராகுதல் – கோவிட் -19 ஐ நிர்வகிக்க பள்ளித் தலைவர்களுக்கான அறிவுரை

### 1 3. கை கழுவுதல்

குழந்தைகள், ஆசிரியர்கள்,ஊழியர்கள் மற்றும் பார்வையாளர்கள் பள்ளிக்குள் நுழைவதற்கு முன்பாக கைகளை கழுவும் வகையில், உடல்ரீதியானதூரத்தில் இருக்கும்படி செய்து, பள்ளிகளின் நுழைவாயிலில் போதுமான நீர் குழாய்கள் (சாய் குழாய்கள், குழு கை கழுவுதல் வசதிகள்) இருக்கச்செய்து அதனுடன் சோப்பு வைத்து கைகழுவுதல் வசதிகளை அமைக்கவேண்டும். கழிப்பறைகளில் கை கழுவுவதற்கு சோப்பு மற்றும் தண்ணீர் செயல்பாட்டில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். வசதிகள் அனைத்து பயனாளருக்கும் கிடைக்கப்பெறுமாறு இருக்க வேண்டும்.

### 2 நீர் கிடைக்கும் தன்மை

கை கழுவுவதற்கு, குடிப்பதற்கு மற்றும் பிற பயன்பாடுகளுக்கு நீர் கிடைப்பதை உறுதி செய்யுங்கள். சீரான அல்லது போதுமான நீர் வழங்கல் இல்லையென்றால், சமூகத்தின் உதவியுடன் நீர் சேமிப்பு திறனை அதிகரிக்கவும் அல்லது முடிந்தால், வீட்டிலிருந்து ஒரு பாட்டில் தண்ணீரைக்கொண்டு வரும்படி குழந்தைகளிடம் அறிவுறுத்துங்கள்.

### 3 பொருட்கள்

தேவையை கணக்கிட்டு, நுகர்வு வளங்களுக்கு போதுமான விநியோகத்தை உறுதி செய்யவும், அவற்றுள்: சோப் (பார் அல்லது திரவம்) கைசுத்திகரிப்பு (குறைந்தது 70% சதம் ஆல்கஹால் செறிவு-டன், சூழ்நிலைக்கு ஏற்றதாக இருந்தால் மட்டுமே) மற்றும் சுத்தம் / கிருமி நீக்கம் செய்வதற்கான சோடியம் ஹைபோகுளோரைட் (வீட்டு ப்ளீச் 0,1% ஆக நீர்த்தப்பட்டது.), கடற்பாசிகள், துடைப்பம் மற்றும் வாளிகள், மற்றும் முககவசங்கள் மற்றும் கையுறைகள் போன்ற பாதுகாப்பு உபகரணங்கள் தூய்மை பணியாளர்களுக்கு கிடைக்கப்பெறுமாறு இருக்கவேண்டும். குறைந்தது 70% ஆல்கஹால் செறிவு கொண்ட ஆல்கஹால் அடிப்படையிலான கிருமிநாசினிகள் ப்ளீச்சிற்கு மாற்றாக பயன்படுத்தப்படலாம்.

### 4 சுத்தம் செய்தல் மற்றும் கிருமி நீக்கம் செய்தல்

தேசிய வழிகாட்டுதல்கள் மற்றும் உலகளாவிய பரிந்துரைகளின்படி வழக்கமான சுத்தம் மற்றும் கிருமி நீக்கம் செய்வதை உறுதிசெய்யவும். பெரும்பாலும் கைப்படும் இடங்களுக்கு முன்னுரிமை அளித்து கிருமிநாசினி கொண்டு சுத்தப்படுத்த வேண்டும். எப்போதும் மேற்பரப்புகளை கிருமி நீக்கம் செய்வதற்கு முன்னர் கரிமப் பொருள்களை அகற்ற சோப்பு மற்றும் நீர் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். தேவையான நேரத்தைக் கணக்கிடுங்கள், சுத்தம் செய்வதற்கும் கிருமிநீக்கம் செய்வதற்கும் ஊழியர்கள் கிடைப்பதை உறுதி செய்து, கையுறைகள் மற்றும் முக கவசங்களை பயன்படுத்த வேண்டும். பெற்றோர் ஆசிரியர் சங்கம், சமூக உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களைத் ஈடுபடுத்தி தேவைக்கு ஏற்றவாறு தூய்மைப்பணிகளை செய்யவேண்டும். கை கழுவுதல் நிலையங்கள் மற்றும் கழிப்பறை வசதிகள் பயன்படுத்தக்கூடிய வகையில் மற்றும் சுத்தமானவையாக இருப்பதை உறுதிப்படுத்தவும்.

### 5 கழிவு மேலாண்மை

வகுப்பறைகளில், கழிப்பறைத் பகுதிகள் மற்றும் பள்ளி மைதானங்களில் உள்ள முக்கியமான இடங்களில் கழிவு தொட்டிகள் உள்ளனவா என்பதை உறுதி செய்யவும். கழிவு மேலாண்மை முறையைப் பயன்படுத்தி தினமும் பாதுகாப்பாக முறையில் கழிவு தொட்டியை சுத்தம் செய்ய வேண்டும்.

### 6 உடல்ரீதியான தூரம்

தேசிய வழிகாட்டுதல் பரிந்துரைக்கப்பட்டபடி குழந்தைகள் மற்றும் பள்ளி ஊழியர்கள் உடல்ரீதியான தூரத்தை குறைந்தபட்சம் ஒரு மீட்டர் இடைவெளியை கடைபிடிப்பதை உறுதி செய்க. சாத்தியமான விருப்பங்கள்: பள்ளிநாட்களில் குழந்தைகளுக்கான கல்வி நேரத்தை மாற்றி அமைத்தல் அல்லது முடிந்தால் கதவுகள் மட்டும் ஜன்னல்களை திறந்து இருக்குமாறு கற்பிக்க வேண்டும். வண்ணப்பூச்சு அல்லது டேப்கோடுகளை கொண்டு இடைவெளியை உருவாக்கி மாணவர்கள் வரிசையாக அல்லது கூடும் இடங்கள் மற்றும் மேசைகளில் உடல்ரீதியானதூரத்தை உறுதிசெய்யவும். ( எ.கா. கழிப்பறைகள் அல்லது kaikaluvum நிலையங்களுக்கு முன்பாக. )

### 7 கண்காணிப்புக் குழுவை நிறுவுங்கள்

பணியாளர் உறுப்பினர் (களை) நியமிக்கவும் – ஆசிரியர்கள் பணியாளர்கள், வாஷ் குழுக்கள், தூய்மை பணியாளர்கள், காவலர்கள், தோட்டக்காரர்கள் அல்லது பழைய மாணவர்கள் நியமிக்கவும். கழிப்பறை மற்றும் கை கழுவுதல் நிலையங்களை (நீர் மற்றும் சோப்பு கிடைப்பது, பராமரிப்பு பிரச்சினைகள், கை கழுவுதல் பழக்கவழக்கங்கள் மற்றும் உடல் ரீதியான தூரம் விதிகளின்படி) மேற்பார்வை செய்ய வேண்டும்.

### 8 நோக்குநிலை பயிற்சி

அனைத்து ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத ஊழியர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கு பாடசாலைகளில் கை கழுவுதல் பற்றியும் கோவிட் -19 பற்றியும் சிறப்பு பயிற்சிகள் தர வேண்டும் மற்றும் கோவிட் -19 ஆகியவற்றில் கழுவுவதற்கான நோக்குநிலையை ஒழுங்கமைத்து, ஒவ்வொருவரும் தங்கள் குறிப்பிட்ட பங்கைப் புரிந்துகொள்வதை உறுதிசெய்க. ஆசிரியர்கள் தங்கள் கற்பிக்கும் குழந்தைக்கு வயதுக்கு ஏற்றவாறு சுகாதார மேம்பாட்டுப் பொருட்கள் பயன்படுத்துவதன் நோக்குவதை உறுதிசெய்க.

### 9 சரிபார்ப்புபட்டியல்கள்

ஆசிரியர்கள் மற்றும் கற்பித்தல் அல்லாத ஊழியர்களுக்கான சரிபார்ப்பு பட்டியல் பயன்பாட்டை அறிமுகப்படுத்தி உறுதிப்படுத்தவும். (உட்பட: தேதி, சரி பார்க்கப்பட்ட நேரம், பொறுப்பான நபரின் பெயர்) குறிப்பாக, இதற்கான சரிபார்ப்பு பட்டியல்களை அறிமுகப்படுத்துங்கள்:

- பள்ளிநுழைவுகளில் (கை கழுவுதல் பழக்கம், கை கழுவுதல் நிலையங்கள், நீர் மற்றும் சோப்பு கிடைக்கும் தன்மை).
- வகுப்பறைகளில் (சுத்தம் மற்றும் கிருமி நீக்கம் பற்றிய நெறிமுறை).
- கழிப்பறைகள் மற்றும் கழிவுமேலாண்மை.

### 10 சுகாதார கலாச்சாரம்

சுகாதார கலாச்சாரத்தை பள்ளியில் நிறுவுதல் மற்றும் சமூகத்தில் சுகாதார நடைமுறைகளை கொண்டு மாற்றத்தை ஊக்குவித்தல். அனைத்து கற்பித்தல் மற்றும் கற்பித்தல் அல்லாத ஊழியர்கள் ஒரு குழுவாக சேர்த்து கல்வியில் முன்னேற முடியும் என்பதையும், தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பு, பள்ளிகள் சுத்தமான மற்றும் பாதுகாப்பான இடங்கள் என்பதையும் உறுதி செய்யவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள். பள்ளிகள் மற்றும் சமூகத்தில் தனிப்பட்ட வாஷ் சாம்பியன்களை அங்கீகரிக்கவும்.

CONTACT: WinS-COVID-19@susana.org

FURTHER INFORMATION: www.susana.org
- '10 IMMEDIATE WinS ACTIONS' (latest version): https://bit.ly/367F7ur
- KNOWLEDGE MAP 'WASH in SCHOOLS & CORONAVIRUS': https://bit.ly/2JDvM39
- 'SAFE BACK TO SCHOOL: A PRACTITIONER'S GUIDE': https://bit.ly/2zS3UHr



german cooperation DEUTSCHE ZUSAMMENARBEIT | giz Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH | unicef | Save the Children | WaterAid

7 ஜூலை 2020 // பள்ளிகளில் வாஷ் குழு ( WinS) ( GIZ, UNICEF, Save the Children, Water Aid, and others) என்பது 60 க்கும் மேற்பட்ட அமைப்புகளைக் கொண்ட அந்தந்த நிறுவனங்களைச் சேர்ந்த WinS பயிற்சியாளர்களின் உலகளாவிய குழுமம்

cc BY NC ND